தினமணி

எமது
செய்தியாளர்களை
தொடர்புகொள்ள

கோவை	94425 04156
மேட்டுப்பாளையம்	94878 42563
பெ.நா.பாளையம்	98425 63953
சூலூர்	98422 44599
அன்னூர்	91502 49095
பொள்ளாச்சி	89034 44119
வடவள்ளி	98436 52523
வால்பாறை	94863 24619

தினமணி

சந்தா குறித்த
விவரம் மற்றும்
புகார்களுக்கு...

கோயம்புத்தூர்	: 97902 12447
மேட்டுப்பாளையம் & அன்னூர்	: 77088 26235
சூலூர்	: 73730 55255
மதுக்கரை	: 88701 48269
பொள்ளாச்சி	: 90435 00177

உதவி மைய எண் : 88070 00216

ஆழியாறு அறிவுத் திருக்கோயிலில் மனைவி நல வேட்பு விழா

ஆழியாறு அறிவு திருக்கோயிலில் நடைபெற்ற மனைவி நல வேட்பு விழாவில் தங்கள் அன்பை பரிமாறிக் கொண்ட தம்பதியினர்.

பொள்ளாச்சி, ஆக. 30: பொள்ளாச்சியை அடுத்த ஆழியாறு அறிவுத் திருக்கோயிலில் மனைவி நல வேட்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

வேதாத்திரி மகரிஷியின் துணைவியார் லோகாம்பாளின் பிறந்தநாள் ஒவ்வோர் ஆண்டும் மனைவி நல வேட்பு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. லோகாம்பாளின் 112-ஆவது பிறந்த நாளை ஒட்டி பொள்ளாச்சியை அடுத்த ஆழியாறு அறிவுத் திருக்கோயிலில் மனைவி நல வேட்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, கோவை வருமான வரித் துறை இணை ஆணையர் தீபக் தலைமை வகித்தார். அறிவு திருக்கோயில் அறங்காவலர் ஆறுமுகம் வரவேற்றார்.

தொடர்ந்து, 'மனைவியின் மாண்பு' என்ற தலைப்பில் பேச்சாளர் தமிழ் இளவல் ராமகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். இதையடுத்து மனைவி நல வேட்பு உரை நிகழ்ந்தது. இதில் கலந்துகொண்ட தம்பதியர் கனி, மலர் பரிமாற்றம் செய்து கொண்டனர். அப்போது தம்பதி ஒருவருக்கொருவர் கைகளைப் பிடித்துக் கொண்டவாறு காந்த பரிமாற்ற தவம் செய்தனர்.

கோவை கோட்டத்தில்

2,206 பேருந்துகளில் புதுப்பிக்கப்பட்ட டிஜிட்டல் பெயர்ப் பலகைகள்

கோவை, ஆக. 30: கோவை கோட்டத்துக்கு உள்பட்ட கோவை, திருப்பூர், ஈரோடு, உதகை ஆகிய மண்டலங்களில் 2,206 பேருந்துகளில் புதுப்பிக்கப்பட்ட டிஜிட்டல் வழித்தட பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை கோட்ட மேலாண் இயக்குநர் கே.முகமது நாசர், அனைத்து போக்குவரத்துக் கிளைகளிலும் இயக்கப்படும் பேருந்துகளில் வழித்தடப் பெயர் பலகைகள் மக்களுக்கு எளிதில் தெரியும் விதமாகவும், டிஜிட்டல் முறையில் புதுப்பிக்கப்பட்டு அமைக்கவும் அண்மையில் உத்தரவிட்டார்.

இதையடுத்து, கோவை கோட்டத்தில் நகர மற்றும் புறநகரப் பேருந்துகளுக்கு புதுப்பிக்கப்பட்ட டிஜிட்டல் வழித்தடப் பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.



கோவை கோட்டத்தில் பேருந்துகளில் அமைக்கப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட டிஜிட்டல் வழித்தட பெயர்ப் பலகைகள்.

இதுகுறித்து, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகம் கோவை கோட்ட போக்குவரத்து அதிகாரிகள் கூறியதாவது:

கோவை கோட்ட மேலாண் இயக்குநர் உத்தரவுப்படி, மக்களின் பார்வைக்கு பேருந்துகளின் வழித்தடம் தெளிவாகவும், எளிதாகவும் தெரியும் வகையில் டிஜிட்டல் வழித்தடப் பலகைகள், நகர மற்றும் புறநகரப் பேருந்துகளில் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

இதில், பேருந்துகள் சென்றடைய உள்ள நிலையங்கள் பெரிய அளவில் திரையில் தெரியும்; செல்லும் வழித்தடப் பகுதிகள் 'ஸ்க்ரோலிங்' முறையில் வரிசையாக டிஜிட்டல் திரையில் தோன்றும். இதனால், எந்த நிறுத்தத்திலும் பேருந்து நிற்காது என நடத்துநர் சொல்ல முடியாது. இந்த டிஜிட்டல் பலகையைப் பார்த்து பயணிகள் சம்பந்தப்பட்ட நிறுத்தத்தின் பெயரைக் கூறி நடத்துநரிடம் பயணச்சீட்டு பெறலாம். டிஜிட்டல் பலகையில் ஊரின் பெயர் வந்தும் அந்த பேருந்து நிறுத்தத்தில் நிற்காது என நடத்துநர் கூறினால் சம்பந்தப்பட்ட நடத்துநர் மீது புகார் அளிக்கலாம். அதன் பேரில் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போது, கோவை கோட்டத்துக்கு உள்பட்ட கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் உதகை ஆகிய மண்டலங்களில் உள்ள 1,171 நகரப் பேருந்துகளில் 1,006 பேருந்துகளுக்கு புதுப்பிக்கப்பட்ட டிஜிட்டல் வழித்தட பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், 4 மண்டலங்களிலும் உள்ள 1,379 புறநகர்ப் பேருந்துகளில் 1,200 பேருந்துகளுக்கு புதுப்பிக்கப்பட்ட டிஜிட்டல் வழித்தட பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக, கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் உதகை ஆகிய மண்டலங்களில் 2,206 நகர மற்றும் புறநகரப் பேருந்துகளில் புதுப்பிக்கப்பட்ட டிஜிட்டல் வழித்தட பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றார்.

மின்மாற்றிகள் தட்டுப்பாடு

தொழில் துறையினருக்கு மின் இணைப்பு வழங்குவதில் தாமதம்

கோவை, ஆக.30: கோவையில் மின்மாற்றி தட்டுப்பாட்டால் விண்ணப்பித்துள்ள தொழில்துறையினருக்கு மின் இணைப்பு வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகப் புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து கோவை கன்ஸ்யூமர் வாய்ஸ் அமைப்பின் செயலர் நா.லோகு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழக இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கோவை மண்டலத்துக்குஉள்பட்ட அனைத்து பிரிவு அலுவலகம் மூலம் புதிய தொழிற்சாலை, குறுந்தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பலவகை நிறுவனங்கள் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு செய்துள்ளனர். இந்த இடங்களில் மின் கம்பம் அமைத்தும் 250 கிலோ வாட் மின்மாற்றி இல்லாததால் மின் இணைப்பு பெறமுடியாமல் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து விசாரித்த போது, மாநகர் வட்டத்தில் மட்டும் ஏப்ரல் மாதம் வரை மின்மாற்றி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் பின் தற்போது வரை மின்மாற்றி ஒதுக்கீடு செய்யாததால் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் தெரிகிறது.

இதேபோல, கோவை வடக்கு மற்றும் தெற்கு, உடுமலை, பல்லடம், திருப்பூர் உள்ளிட்ட வட்ட அலுவலகத்துக்கு உள்பட்ட பிரிவு அலுவலகங்களில் விண்ணப்பம் பதிவு செய்துள்ளவர்களுக்கு, மின்வாரியப் பணிகள் முடிவுற்றும், மின்மாற்றிகள் ஒதுக்கீடு செய்யாததால் மின் இணைப்பு வழங்கவில்லை என தெரிய வந்துள்ளது. இதனால், ஏராளமானோர் தொழில் நிறுவனத்தை இயக்க முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, விரைவில் கோவை மண்டலத்துக்குத் தேவையான மின்மாற்றிகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வெடுக்கும் சிறுத்தை...



கோவை மாவட்டம், வால்பாறை எஸ்டேட் பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் சனிக்கிழமை இரவு வால்பாறையை அடுத்த வாட்டர்பால் எஸ்டேட் அருகே சாலையோரம் உள்ள பாறையில் நீண்ட நேரம் ஓய்வெடுத்த சிறுத்தை.

ஊருக்குள் புகுந்த எறும்புத்திண்ணி: பத்திரமாக மீட்டு வனத்தில் விடுவிப்பு

வடவள்ளி, ஆக.30: கோவை, மருதமலை வனப்பகுதியையொட்டிய கிராமத்துக்குள் புகுந்த எறும்புத்திண்ணியை வனத் துறையினர் மீட்டு அடர்ந்த வனப் பகுதிக்குள் ஞாயிற்றுக்கிழமை விடுவித்தனர்.



பிடிபட்ட எறும்புத்திண்ணி.

கோவை, மருதமலை வனச் சரகத்துக்கு உள்பட்ட கஸ்தூரிநாயக்கன்பாளையம் கிராம குடியிருப்புப் பகுதிக்குள் ஞாயிற்றுக்கிழமை காலை வித்தியாசமான விலங்கினம் நடமாடுவதாக தகவல் பரவியது. இதையடுத்து அப்பகுதி மக்கள் வந்து பார்த்தபோது அது எறும்புத்திண்ணி என்பது தெரிந்தது. இதுகுறித்து உடனடியாக வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் மீட்புக் குழுவுக்கு கிராம மக்கள் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வன மீட்புக் குழுவினர், அந்த எறும்புத்திண்ணியை பாதுகாப்பாக கூண்டு வைத்துப் பிடித்து மருதமலை பகுதி வனக் காவலர் சரவணகுமாரிடம் ஒப்படைத்தனர். எறும்புத் திண்ணியின் உடல்நிலையைப் பரிசோதித்த வனத்துறையினர் அதை மருதமலையை ஒட்டியுள்ள அடர்ந்த வனப் பகுதிக்குள் பாதுகாப்பாக விடுவித்தனர்.

இதுகுறித்து வனத் துறையினர் கூறுகையில், அடர்ந்த வனப் பகுதியில் இருந்து இந்த எறும்புத்திண்ணி உணவு தேடி வந்தபோது வழிதவறி கிராமத்துக்குள் வந்துவிட்டது. அதை மீட்டு பாதுகாப்பாக வனத்துக்குள் விடுவித்தோம் என்றனர்.

வாடிக்கையாளரின் காசோலையைப் பயன்படுத்தி மோசடி: வங்கி அதிகாரி மீதான வழக்கை ரத்து செய்ய நீதிமன்றம் மறுப்பு

கோவை, ஆக. 30: வாடிக்கையாளரின் அனுமதியின்றி அவரது காசோலையைப் பயன்படுத்தி பணத்தை எடுத்த வழக்கில் வங்கி மண்டல மேலாளர் மீதான வழக்கை ரத்து செய்ய சென்னை உயர் நீதிமன்றம் அண்மையில் மறுத்துவிட்ட நிலையில், கோவை மாநகர குற்றப்பிரிவு போலீஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கேசவபாண்டியன் (37) என்பவர், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் ஏற்றுமதி தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த 2016-ஆம் ஆண்டு திருச்செங்கோட்டில் உள்ள தனியார் வங்கியில் ரூ.10 கோடி மதிப்புள்ள தனது சொத்தை அடமானம் வைத்து ரூ.3 கோடி கடன் பெற்றிருந்தார்.

இந்த நிலையில், கடந்த 2019-ஆம் ஆண்டு கேசவபாண்டியனுக்குத் தெரியாமல் அவரது வங்கி காசோலையைப் பயன்படுத்தி, கணக்கிலிருந்த ரூ.6 லட்சத்து 85 ஆயிரத்தை வங்கி அதிகாரிகள் எடுத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து, கேசவபாண்டியன் கடன் தொகையைக் கட்டவில்லை எனக் கூறி, அவரது பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை வங்கி அதிகாரிகள் குறைந்த விலைக்கு ஏலம் விட்டனர். இதனால், அவருக்கு ரூ. 25 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த கேசவபாண்டியன், சம்பந்தப்பட்ட வங்கி கோவை மண்டலத்தின் கீழ் வருவதால், கோவை மாநகர குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில், கிளை மேலாளர் அரவிந்த், மேலாளர் குஞ்சிதபாதம், சீனியர் மேலாளர்கள் கணேசன் மற்றும் மகாராஜன், மண்டல மேலாளர் சுயம்புலிங்க ராஜா மற்றும் மற்றொரு கிளை மேலாளர் ராமன் ஆகிய 6 பேர் மீதும் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில், வங்கியின் மண்டல மேலாளரான சுயம்புலிங்கராஜா தன் மீதான மோசடி வழக்கை ரத்து செய்யக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை கடந்த இரு நாள்களுக்கு முன்பு விசாரித்த நீதிபதி பரதசக்கரவர்த்தி, வங்கி அதிகாரிகள் மீது தீவிர குற்றச்சாட்டுகள் உள்ளதால் வழக்கை ரத்து செய்ய முடியாது எனக் கூறி மனுவைத் தள்ளுபடி செய்தார். மேலும், இந்த வழக்கில் கோவை மாநகர குற்றப்பிரிவு போலீசார் விசாரணையைத் தொடர்ந்து நடத்தலாம் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து, கோவை மாநகர குற்றப்பிரிவு போலீஸார் தங்களது விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

வீட்டு வசதி வாரியத்தில் குடியிருப்பு வாங்கித் தருவதாகக் கூறி ரூ.2.50 லட்சம் மோசடி

வியாபாரி கைது

கோவை, ஆக. 30: கோவையில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் குடியிருப்பு வாங்கித் தருவதாகக் கூறி, பெண்ணிடம் ரூ. 2.50 லட்சம் மோசடி செய்த வெங்காய வியாபாரியை போலீஸார் கைது செய்தனர்.

கோவை, கல்வீரம்பாளையம் விவேகானந்தர் வீதியைச் சேர்ந்தவர் மணிமுருகன் மனைவி ம.பத்மபிரியா (48). இவருக்கு கோவை சுக்கிரவார்பேட்டையைச் சேர்ந்த வெங்காய வியாபாரி சரவணன் (42) என்பவர் அண்மையில் அறிமுகமானார்.

தனக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலகத்தில் அலுவலர்களுடன் பழக்கம் இருப்பதாகவும், அங்கு ஒரு வீடு வாங்கித் தருவதாகவும் கூறியுள்ளார். அதற்காக முன்பணமாக ரூ.3 லட்சம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். இதை நம்பி பத்மபிரியா, பல தவணைகளாக ரூ. 2.50 லட்சத்தை அவரிடம் கொடுத்துள்ளார். ஆனால் உறுதியளித்தபடி, சரவணன் வீடு வாங்கித் தரவில்லை. பணத்தைத் திருப்பிக் கேட்டபோது மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து பத்மபிரியா அளித்த புகாரின் பேரில், வடவள்ளி போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தலைமறைவாக இருந்த சரவணனை சனிக்கிழமை கைது செய்தனர்.

'நீட்' முதுநிலைத் தேர்வு: கோவையில் 4,167 பேர் எழுதினர்

கோவை, ஆக. 30: தேசிய மருத்துவ தேர்வுகள் வாரியத்தால் நடத்தப்படும் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான 'நீட்' தேர்வு நாடு முழுவதும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கோவையில் இந்தத் தேர்வை 4,167 பேர் எழுதினர்.

இந்தத் தேர்வை எழுத கோவையில் மொத்தம் 4,393 பேர் விண்ணப்பித்து இருந்தனர். இதற்காக மாவட்டத்தில் மொத்தம் 18 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த மையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தடையற்ற மின்சாரம், அவசர மருத்துவ உதவி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருந்தன. தேர்வு மையத்துக்குச் செல்ல சிறப்புப் பேருந்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தேர்வர்கள் காலை 7 மணி முதல் 9 மணி வரை தேர்வு மையத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். 9 மணிக்குப் பிறகு வந்த யாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. தேர்வு மையத்துக்குள் செல்வதற்கு முன்பு கண்காணிப்பாளர்கள் மூலம் தேர்வர்களிடம் தீவிர சோதனை நடத்தப்பட்டது. கம்மல், வளையல், செயின், துப்பட்டா, பெல்ட், ஸ்மார்ட் வாட்ச் உள்ளிட்டவற்றை கொண்டு செல்ல கடும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால், தேர்வு எழுதச் சென்றவர்கள் இவற்றை கழற்றித் தங்களது பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றனர்.

கோவையில் நடைபெற்ற இந்தத் தேர்வை மொத்தம் 4,167 பேர் எழுதினர். 226 பேர் தேர்வு எழுத வரவில்லை. தேர்வு முடிந்து பிற்பகல் 12.30 மணியளவில் தேர்வர்கள் வெளியே வந்தனர்.

தேர்வு குறித்து அவர்கள் கூறுகையில், 'தேர்வில் ஒருசில கேள்விகள் மட்டும் சற்றுக் கடினமாக இருந்தன. மற்றபடி புதிய நடைமுறைப்படி கூடுதல் நேரம் வழங்கப்பட்டதால், எந்தவித பதற்றமும் இன்றி நிதானமாகத் தேர்வை எழுத முடிந்தது என்றனர்.

பொள்ளாச்சியில்... பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி தேர்வு மையத்தில் 85 பேர் தேர்வு எழுதினர். 5 பேர் தேர்வு எழுத வரவில்லை. பி.ஏ. கல்லூரியில் 170 பேர் தேர்வு எழுதினர். 20 பேர் தேர்வு எழுத வரவில்லை.

போத்தனூர் – சென்னை இடையே சிறப்பு ரயில்

கோவை, ஆக. 30: போத்தனூர் - சென்னை சென்ட்ரல் இடையே சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிர்வாகம் சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: செப்டம்பர் 4 முதல் 27-ஆம் தேதி வரை வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் போத்தனூரில் இருந்து காலை 7.40 மணிக்குப் புறப்படும் போத்தனூர் - சென்னை சென்ட்ரல் சிறப்பு ரயில் (எண்: 06028) அன்று மாலை 4.45 மணிக்கு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தைச் சென்றடையும். மறுமார்க்கமாக, செப்டம்பர் 4 முதல் 27 ஆம் தேதி வரை வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து மாலை 5.45 மணிக்குப் புறப்படும் சென்னை சென்ட்ரல் - போத்தனூர் சிறப்பு ரயில் (எண்: 06027) மறுநாள் காலை 3 மணிக்கு போத்தனூர் ரயில் நிலையத்துக்குச் சென்றடையும். இந்த ரயில், திருப்பூர், ஈரோடு, சேலம், மொரப்பூர், ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம், பெரம்பூர் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் நீலகிரி மாவட்டத்தில் அரசுத் தலைப்பின் கீழ் உள்ள ஒரு ஆதிதிராவிடர் (Schedule Caste) குறைவு பதிவறை எழுத்தர் காலிப்பணியிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது தொடர்பான விவரங்கள் https://nilgiris.nic.in என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் மேற்கண்ட இணையதள முகவரியில் பதிவிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து 31.08.2026 முதல் நேரில் விண்ணப்பத்தை சமர்பிக்கலாம். (முழுமையான வடிவில் வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்).

விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி - 29.09.2026.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

செ.ம.தொ.இ /762/ வரைகலை / 2026

இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் (ம) வட்டம், விழுப்புரம் மாவட்டம்
தொலைபேசி எண் : 04145-294466, மின்னஞ்சல் முகவரி : angalammantemple@gmail.com
இணையதள முகவரி : www.melmalayanurangalamman.hrce.tn.gov.in
ந.க.எண்.80/2026/அ1/நாள் : 24.08.2026



விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் (ம) வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் பசலி 1436 மற்றும் 1437-க்கு சிகை சேகரித்தல் உரிமம் இ-டெண்டர் (e-tender cum auction) இரு உறை மூலம் திறப்பு நாள் 16.09.2026-ல் நடைபெறவுள்ளது.

e-tender cum auction அறிவிப்பு

வ.எண்	உரிமத்தின் பெயர் மற்றும் உரிம காலம்	இ-டெபாசிட் தொகை ரூபாய்
1	பசலி 1436 மற்றும் 1437க்கு சிகை சேகரித்தல் உரிமம் 01.07.2026 (முதல் சேகரித்து வைக்கப்பட்டுள்ள முடிகளுடன்) 30.06.2028 முடிய உள்ள காலம்	ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)

1) Tntenders மூலம் நடைபெற உள்ள இந்த e-tender cum auction-ல் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் https://tntenders.gov.in/ என்ற வலைதளத்தில் தொடர்பு கொண்டு முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும். 2) இ-டெண்டரில் கலந்து கொள்ள தகுதியான ஆவணங்களை பதிவேற்றம் செய்ய கடைசி நாள் 16.09.2026 நேரம் மாலை 05.45 மணி வரை. 3) இ-டெண்டர் முதல் உறை திறப்பு நடைபெறும் நாள் 16.09.2026 பிற்பகல் 03.00 மணி. 4) இ-டெண்டர் நிபந்தனைகள் https://tntenders.gov.in/ என்ற வலைதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் Tntenders அலுவலக எண். 044-24908115, 0121-4001002, 0120-4001005, 0120-4493395 மற்றும் மின்னஞ்சல் முகவரி : support.etender@nic.in 5) திருக்கோயிலை தொடர்பு கொள்ள வேண்டியஎண்கள். 04145-294466, 294291

த. ஏழுமலை பூசாரி,
அறங்காவலர் குழுத்தலைவர்

திரு. மு. சக்திவேல், பி.ஏ.,பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

ஏ. சுரேஷ் பூசாரி, அறங்காவலர், பா. மதியழகன் பூசாரி, அறங்காவலர், சி. பச்சையப்பன் பூசாரி, அறங்காவலர்,
ம.சரவணன்பூசாரி, அறங்காவலர், ஆர்.எம்.வடிவேல்பூசாரி, அறங்காவலர், வ.சந்தானம்பூசாரி, அறங்காவலர்.

செ.ம.தொ.இ/ 2701 /ஓவியம்/2026

RBL BANK
RBL பேங்க் லிமிட்டெட்.
பதிவு அலுவலகம் : 1 வது சந்து, ஷாபுரி, கோலாபூர் - 416 001
கிளை அலுவலகம் : சாய் கல்யாணி டவர், 105/56, G.N. செட்டி சாலை, T. நகர், சென்னை, தமிழ்நாடு - 600 017

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு (சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழ்)

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் வங்கிக்கு கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர், ஜாமீன்தாரர்(களுக்கும்) அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், RBL பேங்க் லிமிட்டெட் ("ஜாமீன் பெற்று கடனளித்தவர் / வங்கி") க்கு அடமானம் செய்யப்பட்டு / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு (கூட்டாக "சொத்து" என்றே அழைக்கப்படும்) வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்ஃபாசி சட்டம் பிரிவு 13(4) மற்றும் 14 - உடன் படிக்க - மேற்சொன்ன சட்டத்தின் விதிகளின் கீழ் கள சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், வங்கியின் நிலுவைத்தொகைகளை மேற்கொண்டு வரும் வட்டியுடன் சேர்ந்து வசூலிக்கும் பொருட்டு "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்", "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் 06.10.2026 அன்று மேற்சொன்ன சட்டத்தின் விதிகள் 8 மற்றும் 9 ன் கீழ் இதன் கீழ்க்கண்ட மின்னணு ஏல அட்டவணையின் படி விற்பனை செய்யப்படுகிறது.

நபர்களின் விபரம், நிலுவைத்தொகை மற்றும் சொத்து ஆகியவற்றின் சுருக்கமான விபரங்களாவன

வ. எண்	கடன்தாரர் / கூட்டு கடன்தாரர் & ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின் படி நிலுவைத்தொகை & சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி & சுவாதீன தேதி	ஆய்வு தேதி மற்றும் நேரம்	அடிப்படை விலை / டெபாசிட்தொகை	மின்னணு தேதி / நேரம் / ஏல உயர்வுத் தொகை	ஆவணங்களுடன் விலைப்புள்ளிகள் பெற கடைசி தேதி	அதிகாரப்பூர்வ அலுவலர் பெயர் / தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி
1	1). திரு சரண்ராஜ் ராஜேந்திரன், த/பெ ராஜேந்திரன், வீட்டு எண். 1H, சரவணா அபார்ட்மெண்ட், டாக்டர் அம்பேத்கர் சாலை, கோயமுத்தூர் வடக்கு, தமிழ்நாடு - 641 025 மேலும்: வீட்டு எண். 1356, தடாகம் சாலை, RS புரம், கோயமுத்தூர், தமிழ்நாடு - 641 002 (கூட்டு கடன்தாரர் & அடமானதாரர்) 2). திருமதி ராஜேந்திரன் லதா ராஜன், க/பெ ராஜேந்திரன், வீட்டு எண். 1H, சரவணா அபார்ட்மெண்ட், டாக்டர் அம்பேத்கர் சாலை, கோயமுத்தூர் வடக்கு, தமிழ்நாடு - 641 025 மேலும்: வீட்டு எண். 1356, தடாகம் சாலை, RS புரம், கோயமுத்தூர், தமிழ்நாடு - 641 002 (கூட்டு கடன்தாரர்) 3). திருமதி தீப்தி ஸ்ரீ, வீட்டு எண். 1H, சரவணா அபார்ட்மெண்ட், டாக்டர் அம்பேத்கர் சாலை, கோயமுத்தூர் வடக்கு, தமிழ்நாடு - 641 025 மேலும்: வீட்டு எண். 1356, தடாகம் சாலை, RS புரம், கோயமுத்தூர், தமிழ்நாடு - 641 002 (கூட்டு கடன்தாரர்) 4). M/s ராதா கேஸ் சர்வீஸ், அதன் பங்குதாரர் திரு சரண்ராஜ் ராஜேந்திரன் என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது., எண். 1356, தடாகம் சாலை, RS புரம், கோயமுத்தூர், தமிழ்நாடு - 641 002 (கூட்டு கடன்தாரர் & ஜாமீன்தாரர்)	08 செப்டம்பர் 2025ம் தேதியின் படி, ரூ. 73,32,996.84/- (ரூபாய். எழுபத்து மூன்று இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஆறு மற்றும் பைசா எண்பத்து நான்கு மட்டும்) கோரிக்கை அறிவிப்பு தேதி : 11.09.2025 கள சுவாதீன தேதி : 27.07.2026	28.09.2026 காலை 11:00 முதல் பிற்பகல் 2:30 வரை	அடிப்படை விலை : ரூ. 83,39,000/- (ரூபாய். எண்பத்து மூன்று இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) டெபாசிட்தொகை : ரூ. 8,33,900(ரூபாய். எட்டு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை ரூ.50,000/- (ரூபாய். ஐம்பதாயிரம் மட்டும்)	06.10.2026 - காலை 11:30 முதல் நண்பகல் 12:30 வரை. ஒவ்வொரு முறையும் எண்ணற்ற வடங்கா 5 நிமிட நேர நீட்டிப்புடன்	05.10.2026 மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பு - மாலை 05.00 மணி	திரு. குணசீலன் A / 9600144498 / gunaseelan.a@rblbank.com

சொத்து விபரம்: கோயமுத்தூர் வடக்கு பதிவு மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார் பதிவு அலுவலகம், முன்பு கோயமுத்தூர் வடக்கு வட்டம், தற்போதைய அன்னூர் வட்டம், கொண்டையம்பாளையம் கிராமம், சர்வே எண். 388 ல் உள்ள பரப்பு ஏக்கர் 4.89 சென்ட்., க்கு தீர்வை ரூ. 4.00, சர்வே எண். 389 ல் உள்ள பரப்பு ஏக்கர் 6.34 சென்ட்., க்கு தீர்வை ரூ. 5.12, என மொத்தம் ஏக்கர் 11.23 சென்ட்க்கு தீர்வை ரூ. 9.12 இந்த இடமானது சர்வே எண். 388/1A, சர்வே எண். 388/1B, சர்வே எண். 388/2 மற்றும் சர்வே எண். 389/1, 2, 3 மற்றும் சர்வே எண். 389/1 ல் உள்ள மீதி இடங்கள் (நீங்கலாக) என உட்பிரிவு செய்யப்பட்டு, "ஸ்ரீ விஷ்வேஸ்வரா நகர்" என பெயரிடப்பட்டு, ஸ்ரீ மகாலட்சுமி கார்டன்ஸ் ன் ஒரு பகுதியாக உள்ள இடத்தில் உள்ள ப்ளாட் எண்கள். 107 & 120. இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு - ப்ளாட் எண். 108 மற்றும் 119, தெற்கு - ப்ளாட் எண். 106 மற்றும் 121, கிழக்கு - 23 அடி அகல தென்வடல் சாலை, மேற்கு - 23 அடி அகல தென்வடல் சாலை., இதன் மத்தியில் உள்ள அளவீடுகளாவன - கிழமேல் இருபுறமும் 90 அடி., தென்வடல் இருபுறமும் 30 அடி., என மொத்தம் 2700 சதுர அடி அல்லது 6 சென்ட் 86 சதுர அடி இடம் மற்றும் அதனுடன் கூடிய 900 சதுர அடி பரப்பில், மேற்கண்ட அமைவிடத்தில் கட்டப்பட்ட RCC வீடு, இதனுடன் கூடிய கதவுகள், மேல் கூரைகள், ரூஃப், முன் பின் கதவுகள், ஸ்ரீ மகாலட்சுமி கார்டனில் உள்ள பொது சாலைகளில் உள்ள உரிமைகள். கதவு எண். 7/62-SLB-04-107; வரி ரசீது எண். 4090 ; மின் இணைப்பு எண் : 03-182-002-310; பட்டா எண் : 623 நடப்பு உட்பிரிவு சர்வே எண்கள். 389/2A1A1A & சர்வே எண். 389/2A1A4. இதன் மேற்குறிப்பிடப்பட்ட சொத்து கொண்டையம்பாளையம் பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.

விதிகள் மற்றும் நிபந்தனைகள் :

1). மின்னணு ஏலமானது ஆன்லைன் மூலம் மின்னணு ஏல தளத்தில் நடைபெறும். விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பித்து மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கு முன்பே வலைதளம் https://www.bankeauctions.com & https://www.rblbank.com/pdf-pages/news ல் உள்ள ஏலத்துக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளை படித்து தெரிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
2). விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே சொத்தை ஆய்வு செய்து சொத்து மற்றும் அதன் விபரங்கள் தொடர்பாக தம்மளவில் திருப்தி ஏற்படுத்திக்கொள்ளுதல் ஏலதாரர்களின் பொறுப்பாகும்.
3). விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டெபாசிட்தொகை விபரங்களையும் ஆவணங்களையும் வலைதளம் : https://www.bankeauctions.com (தங்களது பெயரை வலைதளம் https://www.bankeauctions.com ல் பதிவு செய்து கொண்டு, பயனாளர் அடையாளம் & கடவுச்சொல் ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்) ல் அவர்களது பயனாளர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை பயன்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும். ஏதேனும் பட்டியலிடப்பட்ட வணிக வங்கியால் "Authorised Officer, RBL Bank Ltd." என்ற பெயரில் வழங்கப்பட்ட கேட்பு வரைவோலை மூலமான டெபாசிட்தொகையை 05.10.2026 அன்று மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும்.
4). விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏலத்துக்கான உதவி / ஆன்லைன் பயிற்சியை M/s. C1 India Pvt. Ltd., தொடர்பு எண் : 7291981124 / 25 / 26. தொடர்பு நபர் திரு பிரபாகரன், அலைபேசி எண். 7418281709, மின்னஞ்சல் முகவரி : tn@c1india.com மிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு திரு. குணசீலன் A, அதிகாரப்பூர்வ அலுவலர் (அலைபேசி எண். 9600144498, மின்னஞ்சல் முகவரி : gunaseelan.a@rblbank.com) அவர்களை தொடர்பு கொள்ளலாம்.
5). வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலர் ஏதேனும் அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க மற்றும் / அல்லது எந்த நேரத்திலும், எக்காரணமும் கூறாமல் ஏலத்தை ஒத்தி வைக்க / ரத்து செய்ய உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்., மேலும் இது தொடர்பாக இவரது முடிவே இறுதியானதும் கட்டுப்படுத்தக்கூடியதுமாகும்.

விற்பனைக்காக 30 நாட்களுக்கு முன்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சட்டப்பூர்வ அறிவிப்பு

மேற்சொன்ன கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரர் ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் மேற்குறிப்பிட்ட கடன் தொகையை மேற்கொண்டு வரும் வட்டி, அபராத வட்டி, இதர வட்டி மற்றும் பிமாற்ற ஆவணங்களின் படியான இதர தொகைகள் ஆகியவற்றுடன் சேர்த்து ஏல தேதிக்கு முன்பாக செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சொத்து ஏலம் விடப்பட்டு / விற்பனை செய்யப்பட்டு, நிலுவைத்தொகைகள் வசூலிக்கப்படும்.

தேதி : 31.08.2026, இடம் : சென்னை
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர் RBL பேங்க் லிமிடெட்